**செய்தி வெளியீடு எண்: 284** **நாள்: 14.05.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மக்களவைத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான முன் ஏற்பாட்டு பணிகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. தமிழ்நாடு, கேரளா, குஜராத் ஆகிய மாநிலங்கள் மற்றும் பாண்டிச்சேரி, லட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றில் வாக்கு எண்ணிக்கைக்கான முன் ஏற்பாடுகள் குறித்த பயிற்சி முகாம் சென்னையில் நாளை (15.5.2019) காலை நடைபெறுகிறது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையாளர்கள் டாக்டர். சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., திரு. சுதீப் ஜெயின், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு வாக்கு எண்ணிக்கை முன் ஏற்பாட்டுப் பணிகள் குறித்து பயிற்சி வழங்குகின்றனர். இப்பயிற்சி முகாமில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கேரளா தலைமை தேர்தல் அதிகாரி திரு. டிக்காராம் மீனா. இஆ.ப., மற்றும் மூன்று மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆய்வுக் கூட்டத்திற்கு பிறகு, அண்ணா பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்கு எண்ணும் மையத்தை பிற்பகல் பார்வையிட உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**